# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 17/ந/2017

ஆணை எண். 195/2017

நாள் : 01/08/2017

திரு கே.ஏ. வெங்கட்டரமணன்,
வாலாஜாபேட்டை – 632 513. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
வாலாஜாபேட்டை – 632 513.
– எதிர் மனுதாரர்

வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை, எண்.19/48, வேங்கட ரமண பாகவதர் தெருவில் வசிக்கும் திரு K.A. வெங்கட்ட ரமணன் அவர்களது 20.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 23.01.2017 அன்று பெறப்பட்டு, 17/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், வாலாஜாபேட்டை, எண்.19/48, வெங்கட ரமண பாகவதர் தெருவில் வசிக்கும் திரு K.A. வெங்கட்ட ரமணன் என்பவர், வாலாஜாபேட்டை, வெங்கடரமண பாகவதர் தெரு 21/40 எண்ணுள்ள பஜனை மடத்திற்கு எதிரே தனிநபர் ஒருவர் மீன்கடையை நடத்தி வருவதாகவும், அம்மீன்கடையை அகற்றித் தரக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர், மீன்கடை நடத்திவருபவரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் மீன்கடை நடத்தப்படும் இடம் குறித்த முகவரியையும் தாக்கல் செய்யவில்லை. முறையீட்டு மனுதாரர், 06.04.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து வாக்குமூலம் அளித்தார். தியாகராஜா சுவாமிகளின் முதன்மைச் சீடரான வேங்கட ரமண பாகவதர் வாழ்ந்த வெங்கட்ட ரமண தெரு, 21/40 எண்ணிட்ட கட்டடத்திற்கு எதிரே மீன்கடை வைக்கப்பட்டுள்ளதாகவும் அக்கடையை நிரந்தரமாக அகற்றித் தரவும் விசாரணையின்போது கேட்டுக்கொண்டார்.

3. வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையர் தனது 07.06.2017 நாளிட்ட அறிக்கையில், புகார் மனு வரப்பெற்றவுடன் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் மூலம் வெங்கட ரமண பாகவதர் தெருவில் செயல்பட்ட மீன்கடை அகற்றப்பட்டு விட்டதென்றும், எனினும் மீன் உரிமையாளர் திருமதி சரஸ்வதி என்பவர், வெங்கட ரமண பாகவதர் தெரு, கதவு எண்.18/1 எண்ணிட்ட வீட்டினை வாடகைக்கு எடுத்து கடை நடத்தி வருவதாகவும், அக்கடையையும் அகற்றக்கோரி 1939–ஆம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ், அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். விசாரணையின்போதும் நகராட்சி ஆணையர் இதனை உறுதி செய்தார்.

4. வாலாஜாபேட்டை, 19–பாலி வெங்கடாசலத் தெருவில் வசித்துவரும் திரு பழனி அவர்களின் மனைவி திருமதி ப. சரஸ்வதி என்பவர் வாலாஜாபேட்டை, 18/1, வெங்கட ரமண பாகவதர் தெருவில் உள்ள வீட்டில் தற்பொழுது மீன்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். 1939–ஆம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டப் பிரிவுகளின் கீழ் இக்கடையை அகற்றக்கோரி நகராட்சியில் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து மீன்வியாபாரம் செய்து வரும் திருமதி ப. சரஸ்வதி என்பவர் வாலாஜாபேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் I–ல் அசல் வழக்கு எண்.43/17–ஐ தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட அசல் வழக்கு நடப்பு ஆண்டு ஆகஸ்டு திங்கள் 11–ஆம் நாள் விசாரணைக்கு வரவுள்ளது. மேற்குறிப்பிட்ட வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில், அந்நேர்வு குறித்து உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு வாலாஜாபேட்டை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 1–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

நகராட்சி ஆணையாளர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.
வாலாஜாபேட்டை.

நகல் :

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்